முருகப்பெருமான் துணை

**மகான் அகத்தியர் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

27.04.2023, வியாழக்கிழமை

1. ஆறுமுகப் பெருமான் அறிவுமாக
அருட்தயவாக மகா சூட்சுமமாக
பேருலகில் மக்களை வழிநடத்த
பிரணவமாக வந்த அரங்கஞானியே
2. ஞானியே சோபகிருது தகர் திங்கள்
நன்மைபட முன்னான்கீர் திகதி குருவாரம்
(சோபகிருது வருடம் சித்திரை மாதம் 14ம் நாள், 27.04.2023, வியாழக்கிழமை)
ஞானிகளுள் தலைமை முனியுமான
நாட்டிடுவேன் அகத்தியர் யானும்
3. யானுமே அறிவுரை ஆசிதனை
உலகோர் ஞான வழிக்கு வர
ஞான உலகமாக உரைப்பேன்
ஞானிகளின் மேல் பற்றுவைக்கா
4. பற்றுவைக்கா பாசாங்கு நிலை
பணிவு போலான நடிப்பெல்லம்
தேற்றம் காணாதப்பா வாழ்வில்
தேடி உண்மை சரணாகதிபட
5. கதிபட உயிர்கொலை நீக்கி
கடமைகள் தவறா தொண்டு
விதிவெல்லும் படியான சேவை
விடாது தொடர்ந்து செய்து
6. செய்துமே ஆறுமுகப் பெருமான்
சித்தியாக அறமாக வந்த
மெய் ஞான குரு அரங்கன்
மேலானத் தொடர்பை கூட்டி
7. கூட்டியே அரங்கன் சொல்லாக
குறைவிலா வரும் மொழிகளை
தட்டாது ஏற்றுப் பணிந்து
தரும ஞான வேதமாக நடந்திட

8. நடந்திட கரும வினைகளும்
நாட்பட கரைந்து விலகி
இடர்படா தடைபடா வண்ணம்
எல்லாம் அறிவுத் தெளிவாகி

9. ஆகியே மாயை வழிச்செல்லா
அகந்தை ஆணவம் கொள்ளா
அகிலமதில் பாவவழிச் செல்லா
ஆன்மபலம் தேகபலம் உள்அடங்கி

10. அடங்கி ஞான குருவழிநடத்த
அறிவுரையாகக் கட்டளை பிறக்க
அடுத்தடுத்து தன்நிலை கடந்து
அனைவரும் ஞானிகளாவர்

11. ஆவரே கலித்துன்பங்களை
ஆற்றல்பட வென்று மீண்டு
ஆவரே அரங்கன் படைகளாக
அறிவித்த அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—